பாரதியார் பல்கலைக்கழகம்

BHARATHIAR UNIVERSITY

COIMBATORE – 641 046, TAMILNADU, INDIA

| State University | Accredited with "A" Grade by NAAC | Ranked 15th among Indian Universities by MOE-NIRF |
|---|---|---|

எண். ப2/2022/14546 நாள் : 12-08-2022

# சுற்றறிக்கை

நமது இந்தியத் திருநாட்டின் 75-ஆவது ஆண்டு நிறைவு சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவாக கொண்டாடும் பொருட்டு வரும் ஆகஸ்ட் 15-ஆம் நாள் காலை 09.00 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் மாண்பமை துணைவேந்தர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து சுதந்திர தின விழா சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

மேலும், சுதந்திர தின விழாவில் பல்கலைக்கழக மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வுகள் பல்கலைக்கழக வளாகத்திலும், கலை நிகழ்ச்சிகள் டாக்டர்.உஷா கீர்த்திலால் கலையரங்கிலும் நடைபெறவுள்ளன.

கொடியேற்றும் நேரம் : காலை 09.00 மணி

கொடியேற்றுபவர் : பேராசிரியர் முனைவர்.பெ.காளிராஜ்
துணைவேந்தர்

எனவே, அனைத்துத் துறைத்தலைவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விழா தொடங்குவதற்கு முன்னதாக காலை 8.15 மணியளவில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கவும் மற்றும் அனைவரும் விழாவில் கலந்து கொள்ள ஏதுவாக பல்கலைக்கழக பேருந்து, புகைவண்டி நிலையத்திலிருந்து 15.08.2022 அன்று காலை 08.00 மணியளவில் புறப்பட்டு காந்திபுரம் மத்தியப்பேருந்து நிலையம், காந்திபார்க், லாலிரோடு, வடவள்ளி வழியாக பல்கலைக்கழகம் வந்துசேரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்துத்துறைத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இச்சுற்றறிக்கையினை ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களிடையே சுற்றுக்கு விட வேண்டப்படுகிறது.

12/8/22

பதிவாளர் (பொ)

படி: 1. அனைத்து ஆட்சிக்குழு உறுப்பினர்கள்
2. பேராசிரியர் மற்றும் தலைவர் உடற்கல்வியியல் துறை - தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டப்படுகிறது.
3. பல்கலைக்கழக பொறியாளர்
4. மக்கள் தொடர்புஅலுவலகம் - தக்க நடவடிக்கைக்காக
5. மாணாக்கர் ஒருங்கிணைப்பாளர்: துறைகளில் உள்ள மாணாக்கர்களை நிகழ்வில் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு வேண்டப்படுகிறது.
6. செயலர், துணைவேந்தர் அலுவலகம்.
7. நேர்முக உதவியாளர், பதிவாளர் அலுவலகம்

REGISTRAR CBE-46. BHARATHIAR UNIVERSITY